# குமஸ்தாவின் பெண்தான்

அல்லது

## கொலைகாரியின் குறிப்புகள்

— சௌமியன் —

முன்பு: [கள்ளக் காதலனைக் கொன்று தூக்குத் தண்டனை பெற்ற காந்தா, ஆரம்பக்காதல் முறிந்து, வயோதிகனை மணந்து விதவையாகி, பின்னர் ஓர் மிராசுதாரரின் நேசியாகிறாள். அதன் பிறகு]

மிராசுதாரரின் ஏற்பாட்டின்படி நான், வீட்டை விட்டு வெளியேறி, தனி பங்களாவில் வசிக்கலானேன். நான் வாழுவதுடன், என் உதவியைக் கொண்டு அம்மாவும் தங்கையும் வாழலாம். பணம்தர நான் தயாராக இருந்தேன். அம்மா, ஒரு காசுகூட அந்த விபசாரியிடமிருந்து பெறமாட்டேன் என்று கூறிவிட்டார்கள். அம்மாவுக்குத் தெரியாது நான் எப்படி, எப்படி, குடும்பத்துக்கு உதவிசெய்தேன் என்பது. ஏலம் போன வீட்டை மீட்டேன். என்பேருக்கு விலைக்கு வாங்கினேன். தம்பிக்கு அதை உயில் எழுதி வைத்தேன். குடும்பவீடு முழுகி, வேறுகைக்குப் போக விடுவேனா? குடும்பம் நடத்த என்னிடம் பணம் வாங்க, அம்மா மறுத்துவிட்டார்கள். ஆனால் நான் மாதா மாதம் பல அறநிலையங்களின் பெயர்வைத்துப் பணம் அனுப்பிக்கொண்டே இருந்தேன். அதுமட்டுமா? ஒரு தந்திரமான ஏற்பாடு செய்தேன். அம்மாவுக்கு விஷயமே தெரியாது.

அம்மாவுக்கு, ஒரு தம்பி உண்டு. சுத்தத்தாரி, நாங்கள் கஷ்டப்பட்ட காலத்திலே கண்ணெடுத்தும் பார்த்ததில்லை. நான் மிராசுதாரரிடம் "சினேகமான" பிறகு, என்னை அண்டினான். அவன், அந்த உலகத்து ஆசாமி. அவன் மூலம் பணம் அனுப்புவேன். அவன் தான் கஷ்டப்பட்டு சம்பாதித்து, தமக்கையின் கஷ்டத்துக்கு உதவுவதாகக்கூறி அம்மாவை ஏய்த்துவந்தான். இந்தத் தாராளத்தபால்காரன் உத்தியோகத்துக்குத் தக்க சம்பளம் தந்தும் வந்தேன். என்னிடம் பணமா இல்லை! பணம் என்பாதத்தைத் தொட்டு முத்தமிட்டுக் கொண்டிருந்தது. மிராசுதாரரின் "மோகனாங்கி" ஆன பிறகு பணமே எனக்குப் பரிவாரம். உல்லாச உலகில் நுழைந்தேன். என் ஏற்பாட்டின்படி, சாந்தாவுக்கு சங்கீத வாத்தியார் அமர்த்தப்பட்டார். அம்மா, தன் தம்பியின் கருணைப் பிரவாகம் இது என்று எண்ணினார்கள். சாந்தாவின் குரல் குயில்போன்றது. வெகு விரைவிலே நல்ல பாடகியானாள், என் செல்வாக்கை உபயோகித்தேன். ரேடியோவிலே, சாந்தாவுக்கு, மாதத்திலே மூன்று நான்குமுறை "சான்ஸ்" கிடைக்க ஆரம்பித்தது. குடும்பக் கஷ்டத்தைத் தீர்க்க சாந்தாவின் சங்கீதம் உதவிற்று. ஆனால் அந்த சங்கீதத்தை பயன்படும்படி செய்தவள் யார்? அம்மாவுக்கு அது தெரியாது. சாந்தாவுக்கு சாடைமாடையாகத் தெரியும்.

மண்டையை உருக்கும் வெயிலில் இருந்துவிட்டு, குளிர்ந்த சோலைக்குள் போய் உட்கார்ந்தால், எப்படி இருக்கும்! வாழ்க்கை எனக்கு, அத்தகையதாயிற்று. உலகம், ஒரு நாள், ஒருவாரம், ஒருமாதம், ஏதோ உளறிற்று. அதுவும் என் எதிரில் அல்ல! பிறகு, என்னைத் தூற்றிப் பேசுவதையும் விட்டுவிட்டது. நான் குடிபுகுந்த குதூகலம் நிறைந்த புதுஉலகமோ என்னைக் கைலாகு கொடுத்து வரவேற்று, அந்தஉலகின் அழகைக்காணச் சொல்லிற்று. இவ்வளவு இன்பம் இருக்க, இவைகளை விட்டு, வீண்காலந்தள்ளினேன். மிராசுதார், வாங்கின மோரிஸ் மைனர்காரில், டிரைவர் துரைசாமி 40-மைல் வேகத்திலே ஓட்ட, மிராசுதார் என் தோள்மீது கையைப்போட்டபடி, இன்று தாராசசாங்கம்நாடகம் போகலாமா, என்று, கேட்கும்போதுதான் ஆகட்டும், நாடகத்திலே உட்காரும்போது, என் வைரத்தோடும் கொங்கட்டமும், ஒளி விட, சிவந்த என் அதரத்தைப் பிளந்துகொண்டு, நகைப்பு ஒளிதரவும், அதைக்கண்டு, "குஷி ஆட்கள்" கண்ணை என்பக்கம் திருப்பிப் பூசை செய்யும்போது தானாகட்டும், டே! ராமா! டீபோட எவ்வளவுநேரம், என்று நான் அதட்ட, "வந்தேனம்மா" என்று பணிந்து கூறிக்கொண்டு சமயல்காரன் வரும்போதுதான் ஆகட்டும், இந்தப்புதுமோஸ்தர் நிலக்கண்ணாடியோ, இந்தஹாலிலே ரம்மியமாக இருக்கிறது என்று நண்பர்கள் புகழக்கேட்கும்போது தானாகட்டும், சுராஜ்மல் கம்பெனியார், புதுமோஸ்தர் நகைகளை அனுப்பிவைக்கும்போது தானாகட்டும், நான் ஆனந்தம், அடையாமல் இருக்கமுடியுமா. இவ்வளவுதானா! என் புன்சிரிப்புக்கு மிராசுதாரர், ஏங்கிக்கிடப்பார். எனக்குத்தலைவலி என்றால் அவருக்கு மனவலி. டாக்டர்கள் இரண்டு மூன்றுபேர் வந்துவிட வேண்டும். எனக்கு என்னதேவை என்பதை ஆராய்ந்துபார்த்து, குறிப்பறிந்து நடப்பதே அவருக்கு வேலை. அவர் என் மனம் மகிழ்ந்தால்தான், மனோகரமாக வாழமுடியும் என்று கருதினார். "பெட்ரோல் போடாத மோட்டார் ஓடுமா? அதுபோல், குஷியில்லாத குட்டியைக் கொண்டு எப்படி காலந்தள்ளுவது? குட்டிக்குக் குஷி பிறக்கவேண்டுமானால், என்னவேண்டுமோ அதை வரவழைத்துத்தரத்தானே வேண்டும்" என்று மிராசுதாரர், கூறுவார். அதுநான் நுழைந்த புதுஉலகின் சட்டம். என் அழகுக்கு அவர் அடிமை. அந்த அழகு வளர வளர அவரது அடிமைத்தனம் வளரும், ஆகவே என் அழகை அதிகரிக்கச்செய்வதிலே எனக்கு அக்கரை பிறந்ததிலே ஆச்சரியம் என்ன? என்னுடைய "பாஷன்" தான் "மாடல்" ஆகிவிட்டது. "ஜாலி கர்ல்" என்பது எனக்குப் புதுஉலகம் தந்தபட்டம், "லக்கிபெலோ" என்று மிராசுதாரரைப் பாராட்டுவார்கள். எவ்வளவு வறுமையில் வாடினேனோ, அவ்வளவு செல்வத்தில் புரண்டேன். தரித்திர நாராயணியாக இருந்த நான் தளுக்குச்சுந்தரியானேன். விசாரம் பஞ்சாய்ப்பறந்தது. பொன்குடத்துக்குப் பொட்டிடவேண்டுமா என்பார்கள் பழமொழி. ஆனால் பொன்குடம் மெருகுபூசாது இருந்தால் எப்படி இருக்கும்? நான் வறுமையில் இருக்கும்போது அழகாகத்தான் காணப்பட்டேன். ஆனால் என் முகத்திலே ஒருவித சோகம், கண்களிலே பசிக்குறி காணப்பட்டு வந்தது. புது உலகில், கிடைத்தமெருகு, என் அழகை அதிகரிக்கச் செய்தது. மேகத்தைவிட்டு வெளி ஏறியநிலவு, எப்படி இருக்கிறது. வறுமையைவிட்டு நீங்கி வெளிவந்த என் வசீகரமும் அப்படியே இருந்தது. என் புதுவாழ்க்கையில், நான் வாழ்வின் மதுரபானத்தை மனங்கொண்ட மட்டும் பருகினேன். பரவசமானேன். எங்கள் அப்பாவை விரட்டிய மிராசுதாரர், என் விழியைத் தன்வழியாகக்கொண்டு, என்பேச்சை வேதமாகக்கொண்டு, என்மடியைத் தேவலோகம் எனப்புகன்று, என்சரசத்தை, எதிர்நோக்கிக் கிடக்கும்போது, நானே பெருமையும் அடைந்ததுண்டு. பணம், என்கையில் புரளும்போது, பூரித்தேன். வசீ[illegible]விலே, வேகமாகப்புகுந்தேன், ஆழமாக [illegible]தேன், ஆனந்த வல்லியானேன். உலகம், உயிரோடு முன்பு வாட்டிக் கொண்டிருந்தது. [illegible]

(9ம் ப[illegible])

Library's copy lacks p. 1-2

அறிவியற் பகுதி

# இந்துமதமுந் தமிழரும்

முன் தொடர்ச்சி.

—————•[ நக்கீரன். ]•—————

இதற்கு முன்னர் எழுதிய கட்டுரையில், திருநாவுக்கரசர் பாடிய தேவாரத்தில் காணப்பட்ட "**நினைந்துருகும்** அடியாரை நையவைத்தார்" என்ற சொற்றொடரைச் சான்றாக வைத்துக் கடவுள் இலக்கணத்தைப் பற்றிச் சிறிதுஆராய்ந்தோம். இக்கட்டுரையில், அத்தேவாரத்தில் காணப்படும் "**திருவடி என் தலைமேல் வைத்தார்**" என்ற சொற்றொடரை ஆதாரமாகக் கொண்டே அந்தக்கடவுளைப்பற்றிய இலக்கணங்களைப் பின்னும் ஒரு சிறிது ஆராய்ந்து தெளிவுபடுத்துவாம். கடவுளைப் பற்றிப் பலவாறு—பலதுறைகளிலும் நடுநின்று ஆராய்ந்த பல பேரறிஞர்கள் எல்லாரும், அது குறித்து வெளியிட்டிருக்கும் முடிந்த முடிவானது, சிறிதளவு தங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்திப் பார்க்கும் எவரும் எவ்வித ஐயப்பாடுமின்றி ஒப்புக்கொள்ளும் முறையில், அது ஒரு கூட்டத்தாரின் பிழைப்புக்காக ஏற்படுத்திய ஒரு பொருளற்ற கற்பனைச் சொல் என்பது நன்கு தெளிவாகும். ஆனால், கடவுளைப் பற்றிய உண்மையான கருத்து 'இதுதான்' என்று எத்துணை விளக்கிச் சொன்னபோதிலும், அதனைத் தங்கள் காதால் ஏற்றுக் கருத்திற் பதியாத அல்லது அங்ஙனஞ்செய்யவிரும்பாத **மாக்களைப்** பற்றி எவரும் கவலைப்படவேண்டியதில்லை, என்றாலும், இத்தகையினர் தொகையே இன்னும் பெரும்பாலாக இருந்துகொண்டு நம்மவரின் அறிவு வளர்ச்சிக்குத் தடைசெய்து வருவதை நோக்கும்போதுதான் இது போன்ற கட்டுரைகளை எழுதி வெளியிடவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது.

உலகில் நடைபெறுகின்ற ஒவ்வொரு செயலும் மக்களின் முயற்சியாலும் அறிவாலுமே நிகழ்கின்றன வென்பதைக் கண்கூடாகக் கண்டிருந்தும், அச்செயல்கட்கெல்லாம் கடவுட்டன்மை கற்பித்து அறிவைப் பாழாக்கி நிற்கும் ஒரு கூட்டத்தைப் பார்க்கும்போது எமக்கு அவர்கள்பால், இரக்கமே உண்டாகின்றது. கண்ணாற்காண முடியாததும், கருத்தால் கணிக்க முடியாததுமான ஒன்று எதுவோ, அதுவே கடவுள் என்று சொல்லப்படும் என்பதாக மத நூல்கள் எல்லாம் பன்னிப் பன்னிப் பேசியுள்ளனவே; இங்ஙனம் கருத்திலிருத்த முடியாததும், கண்ணாற் பார்க்க முடியாததுமான ஒன்றைப் பற்றி 'நீங்கள் ஏன் கவலைப்படுகின்றீர்கள்' என்று கடாவும் பகுத்தறிவாளன் மீது கடாபோற் சீறி விழுகின்றனர் கடவுளன்பர்கள். மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்டதாகச் சொல்லப்படும் அந்தக் கடவுளைப் பற்றி மக்கள் ஏன் கவலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பவர்கள்மீது எரிந்து விழுகிறார்கள் அந்தக் கடவுளன்பர்கள். மனிதர் கடவுளாகின்ற புதுமை மாநிலத்தில் நாடோறும் நடைபெற்று வருவதைக்கண்டும், கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத வேறொன்று கடவுள் என்ற பெயரோடு இருக்கிறதாக இரைகின்றனர்சிலர். அறிவிலும் ஆண்மையிலும் வீரராய்த் திகழ்ந்து புகழ்பெற்ற மக்களுக்காக ஏற்படுத்திய கல்லெடுப்புகள் எல்லாம் இன்று கடவுளர் ஆலயங்களாக மாறிநிற்கும் மறுக்க முடியாத உண்மையை எடுத்துக்காட்டும் ஏறுபோன்றான் மீது சீறி விழுகின்றனர் சிவ அன்பர்கள். மக்களாய்ப் பிறந்தசிலர் மதிகெட்டு மண் ஓடுகையிலேந்தி மானங்கெட்ட பிச்சை ஏற்று மன்பதையின் சுமையாய் இருந்து மாண்டபின் மாண்புமிக்க கடவுளராகின்ற கதையைக்கூறி, "இவர்களா உங்கள் கடவுளர்?" என்று கேட்கும் பகுத்தறிவாளனைக் கண்டால் பதறுகின்றது பரந்தாமன் அடியார் கூட்டம். காதல் வாழ்க்கையை மேற்கொண்டு கண்ணியமாக வாழ்ந்த சிலர், அவ்வாழ்க்கையில் ஏற்பட்ட ஏதோ ஒரு வெறுப்பின் காரணமாகக் காவி அணியும் வாழ்க்கையை மேற்கொண்டு கமண்டலமேந்திய உடனே கடவுளராக மதித்து மன்பதையால் வணங்கப்படும் நிலைமையை அடைந்து விடுகின்றனரே; "இவர்களா உங்கள் கடவுளர்?" என்று கேட்டால், கேட்டுமுட்டு—கண்டுமுட்டு என்று கரைகின்றனர் சில கடவுளன்பர்கள். காலம் முழுவதும் பொய்யும் புரட்டும் செய்து உலகத்தவரை ஏமாற்றிய ஒருவன் காவியணிந்து கண்டிகை பூண்டு கமண்டலம் ஏந்திய உடனே கடவுளாகின்ற விந்தையைக் கண்டீரா அன்புமிக்க கடவுள் தோழரே என்று கேட்டால் என்பொடிய ஏறிக்குதிக்கிறார் அந்தக் கடவுளன்பர். கருத்திலே கள்ளங்கவடுள்ள ஒருவன் கழுத்திலே கண்டிகையும் இடுப்பிலே காவியும் கையிலே கமண்டலமும்கொண்டவுடன் அவனிடத்தே ஓடிவந்து புகுந்துகொள்ளும் கடவுள், காலமுழுவதும் கருத்தொருமித்த வழிபாடு செய்பவனுக்கு வறுமையையும் பிணியையும் கொடுப்பது ஏனோ? என்று கேட்டால் எங்கிருந்தோ வந்து விடுகிறது அந்தக் கடவுளன்பர்களுக்குக் கருத்தழிந்த எண்ணமும், அதன் பயனாக எற்படுஞ் சினமும். எவ்விதமான பற்றுமற்றதாகச் சொல்லப்படும் அந்தக் கடவுள், உலகமக்களின் நன்மை தீமைகளில் பற்றுவைத்துத் தொல்லைப்படுகின்றதே, இத்தகைய ஒன்றைப் பற்றற்ற பெரும்பொருள் என்று சொல்வது பொருந்துமா என்று கேட்டால், ஏதேதோ போலித்தணிவுகூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார் அந்தக் கடவுளன்பர். முன்னர்க் காலத்தில் தொட்டதற்கெல்லாம் ஓடி வந்ததாகச் சொல்லப்படும் அந்தக் கடவுள், இந்தக் காலத்தில் ஏன் வருவதில்லை என்று கேட்டால், கலிகால மக்களின் கண்ணிற் புலப்படாது அந்தக் கடவுள் என்று ஒரு கதையை மிக எளிதாக அளந்து விடுகிறார் அந்தக் கடவுளன்பர். தன்னைப்பார்க்க முடியாத மக்களைப் படைத்தது மக்களின் குற்றமா அல்லது அந்தக் கடவுளின் குற்றமா? கலிகாலத்தில் கடவுள் நம் கண்களிற் படாதென்றால், அந்தக் கடவுளுக்காக மக்கள் செலவிடும் பொருளும் காலமும் வீணாகாதா? காணமுடியாத ஒன்றைக் காணமுடியுமென்று சொல்லிக் கடவுள்பேரால் மக்களின் பொருளைப் பறிப்பது ஒரு கூட்டத்தாரின் வயிற்றுப் பிழைப்பை நாடிய சூழ்ச்சியாகாதா? என்று இவ்வாறான அறிவோடு தொடர்புபட்ட கேள்விகட்கு விடையிறுக்க முடியாத கடவுளன்பர்கள், கலிகால மக்களாகிய நம்மனோரோடு உடனிருந்தே கொல்லும் நோய்போல், நம்மை ஏமாற்றி வருவதுதான் விந்தையினும் விந்தை.

அன்பர்களே! இன்னும் இதுகுறித்த பல விளக்கங்கள் அடுத்தடுத்து வரும் எமது கட்டுரைகளில் விரித்துரைக்கப்படுவதோடு, "திருவடி என் தலைமேல் வைத்தார்" என்ற சொற்றொடரின் பொருளும் விளக்கப்படும். (தொடரும்)

## கோயில் பட்டியில் ஜஸ்டிஸ் மாநாடு.

ஜூன் மாதம் 14ந்தேதி கோயில் பட்டியில், (திருநெல்வேலி ஜில்லா) ஜஸ்டிஸ் மாநாடு நடத்த எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுவருகின்றன.

# சூழல் விளக்கு

## "ஹர்" அட்டூழியங்கள்

சிந்து மாகாணத்தில் "ஹர்" வகுப்பினரின் அட்டூழியங்கள் சொல்லுந்தரமல்ல. கொலை, கொள்ளை, இரயிலைக் கவிழ்த்தல் முதலிய பெரும் பாதகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சிந்து மக்களைக் கலங்கடித்து வருகின்றன. இந்த அட்டூழியங்களின் கலவரத்தினால் யுத்த அபாயத்தைப் பற்றிநினைக்கக்கூட அம்மாகாணவாசிகளுக்கு நேரம் இல்லை என்று சொல்லலாம். நிலைமை அவ்வளவு மோசமாகிவிட்டிருக்கின்றது. "ஹர்" வகுப்பினர் சிந்து மாகாணத்தில் நவாப்சா, தர்ப்பார்கார் என்ற ஜில்லாக்களில் நான்கு தாலுக்காகளில் வசிக்கும் ஒருவித மலைநாட்டினர் என்றும், சிறையில் வைக்கப்பட்டுள்ள அவர்களின் தலைவர் பகாரோபீர் என்பவரை விடுதலை செய்யவே அவர்கள் இவ்வித அட்டூழியங்கள் புரிந்து வருகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது. அங்கு இப்பொழுது அரசாங்கம் நடத்தி வரும் அல்லாபக்சு மந்திரிசபையின் திறமைக் குறைவே இதற்கு காரணம் என்று அவ்விடத்திய காங்கரசுத்தலைவர் தோழர் செயராமதாசர் தௌலத்ராம் என்பவர்குறைகூறுகிறார். ஆனால் அல்லாபக்சு மந்திரிசபை காங்கரசார் ஆதரவில்தான் நடந்துவருகிறது என்பதையும், காங்கரசாரின் சட்டமறுப்புக் கொள்கைகளையே இந்த "ஹர்" வகுப்பினர் பலாத்கார வழியில் கையாண்டு வருகின்றனர் என்பதையும் அவர் எடுத்துக்காட்டவில்லை. அவர் சொல்லாவிட்டாலும், சிந்து தனி மாகாணமாகப் பிரிக்கப்பட்டபின் இதுவரையில் அங்கு நிர்வாக ஆற்றலுள்ள மந்திரிசபை அமைக்கப்படாததற்கும், தற்போதைய கையாலாகாத மந்திரிசபை ஏற்பட்டிருப்பதற்கும், காங்கரசாரின் சுயநல, கீழ்த்தர சூழ்ச்சிகளே மூலகாரணமாகும். ஆகவே "ஹர்" வகுப்பினரின் அட்டூழியங்களுக்கு வழிகாட்டியவர்கள் காங்கரசாரே என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த நிலைமையில், கண்டிப்பான முறைகளால் மேற்படி அட்டூழியங்களை நிறுத்தப்போவதாக சிந்து கவர்னர் பெருமான் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை சிறிது ஆறுதலை அளிக்கிறது. நிலைமைஇவ்வளவு சீர்கெட்டபின்னும், 'சட்டத்தையும் ஒழுங்கையும்" நிலைநாட்டத் திறமை இல்லாத அல்லாபக்சு மந்திரிசபை 'மயிலாட்டம்' போடுவதற்குச் சர்க்கார் இடம் கொடுத்துக்கொண்டிருப்பானேன் என்பதுதான்விளங்கவில்லை. மந்திரிசபையைக்கலைத்துவிட்டு 93-வது பிரிவுப்படி கவர்னர் பெருமானே அரசை ஏற்றுநடத்துவதே சிந்து மாகாணம் சீர்ப்படச் சிறந்த வழியாகும்.

## காந்தியார் சலசலப்பு

கிரிப்சுதுரை வந்து போனபிறகு காங்கரசின் "ஆர்ப்பாட்டங்கள்" எல்லாம் ஒடுங்கிவிட்டன. ஆரியக் காங்கரசுத்தலைவர்களின் பேச்சுகளிலும் பத்திரிகைகளின் எழுத்துக்களிலும் முந்தின "ஜோரை"க் காணோம். காங்கரசார் மிகவும்இறங்கின சுதியிலேயே பேசியும் எழுதியும் வருகின்றனர். "ஆரிய ஆதிக்கத்தின் முடிவுகாலம் தொடங்கிவிட்டது, இனி நாடுஉருப்படும்" என்று பொதுமக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேளையில் காந்தியார் மீண்டும் தமது "சலசலப்பு" வித்தையைக் காட்ட ஏற்பாடுசெய்து வருவதாகத் தெரிகிறது. அதாவது இந்தியாவில் ஒற்றுமை ஏற்படுவதற்காகப் பிரிட்டிஷார் தாங்களாகவே இந்தியாவைவிட்டு விலகிவிட வேண்டும் என்று அவர் பிரிட்டனுக்கு வேண்டுகோள் விடுக்கப் போகிறாராம். இந்த யோசனைப்படி பிரிட்டிஷார் போய்விட்டால் இந்தியாவில் ஒற்றுமை ஏற்படும் அல்லது இந்தியா சின்னாபின்னப்பட்டுச் சிதறுண்டு போகவும் நேரிடக்கூடும் என்று அவர் தமது பத்திரிகையில் எழுதி இருக்கிறார். இதற்காக அவர் ஒரு புதுத்திட்டம் வகுத்துக்கொண்டிருப்பதாகவும், விரைவில் அந்தத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்படுகிறது. காந்தியாரின் புதிய முயற்சி நாட்டின் முன்னேற்றத்துக்கு ஏற்றதா என்பதையே இங்கே கவனிக்க வேண்டும். இந்தக் கிளர்ச்சியினால் நாட்டுக்குக் கெடுதியே யன்றி நன்மை ஏற்படாதென்பது திண்ணம். பிரிட்டிஷார் போய்விட்டால் ஒருவேளை ஒற்றுமை ஏற்படலாம் அல்லது மாபெரும் சீர்குலைவு ஏற்படலாம் என்று அவர் குறிப்பிட்டிருப்பதே இதற்கு ஆதாரமாகும். இது சூதாடிகள் முயற்சி போன்றதேயன்றி வேறில்லை. காந்தியார் இந்திய அரசியல் துறையில் நுழைந்தது முதல் இந்தியாவுக்கு சீரழிவு காலம் தொடங்கிற்று என்றே சொல்லவேண்டும். "பலாத்காரம் இல்லாத ஒத்துழையாமை இயக்கம் முதல் யுத்த எதிர்ப்புச் சத்தியாக்கிரகம்,, வரை காந்தியார் நடத்திய கிளர்ச்சிகளினால் நாட்டுக்கு ஒருசிறிதேனும் நன்மைஉண்டானதுண்டா? நன்மைக்குப் பதிலாக மகத்தான கேடுபாடுகளே பொதுமக்கள் கண்டபலன். காந்தியாரும் காங்கரசும் இல்லாதிருந்தால் நமது நாடு இதற்குள் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடும் என்பதை எண்ணிப் பாருங்கள். காந்தியாரின் புதிய கிளர்ச்சியாலும், அது நடைமுறைக்கு வந்தால், மேற்கொண்டு கெடுதிதான் நேரிடப்போகிறது. இதற்கு "சோசியம்" கேட்க வேண்டியதில்லை. காந்தியாரின் முந்தின முயற்சிகளின் கதியை கவனித்தாலே விளங்கிவிடும். இதுபற்றி வேறுவிதமாகக் கூறுகின்றனர் ஒருசாரார். அதாவது "குந்தினையா......உன்சந்தடிஅடங்க" என்ற நிலைமைகாங்கரசுக்கு ஏற்பட்டுவிட்டது. ஐயையோ, எல்லாம் போச்சுதே" என்று அவநம்பிக்கைக் குழியில் வீழ்ந்து மனம் குமுறுகிறார்கள் காங்கரசார். அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகவே காந்தியார் இந்தப் "பகட்டு" வேலையில் இறங்கியுள்ளார்; வேறொன்றுமில்லை." என்பது அவர்கள்கருத்து. அது எவ்வாறாயினும் பொதுமக்கள் முன்போல இப்பொழுது சுலபத்தில் ஏமாறத்தயாராய் இல்லை. ஆகையால் காந்தியார் பிரிட்டனுக்கு கூறப்போகும் இந்தப் புதிய யோசனையைத் தாமே கையாண்டால் நாட்டுக்கு அதிக நன்மை ஏற்படக்கூடும். அதாவது காந்தியாரும், காங்கரசும். அரசியல் துறையிலிருந்து தாங்களாகவே விலகி விட்டால், நாட்டில் மலிந்துள்ள வேற்றுமைகளும், துவேஷங்களும்மறைந்து ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் வழிதோன்றும்என்பது உறுதி.

## "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே"

என்பது பழமொழி. காந்தியாரின் புதிய கிளர்ச்சியை இது மிகவும் தெளிவாகச் சித்தரித்துக் காட்டுகிறது. இத்தகைய ஒரு மதிகெட்ட முயற்சியைச் சில காங்கரசுப் பத்திரிகைகள் ஆதரித்து வருணித்து எழுதும் வேடிக்கையே ஒரு தனிரகம். சென்னையிலிருந்து வெளிவரும் "பாரததேவி" எழுதுகிறது:

"யுத்தம் நெருங்கி வந்துள்ள இந்தச் சமயத்தில் காந்தியார் ஒரு போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறாரென்றால் அது சாதாரண காரியமில்லை. மற்றப்பேர

8ம் பக்கம் பார்க்க.

தேவை.

மாதம் ரூ 25/-சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

காஞ்சி நிதி லிமிடெட்,
காஞ்சீபுரம்.

திராவிடநாடு

ஞாயிறு] 31—5—42 [காஞ்சி.

# தூக்குவீர் கத்தியை!

கெர்ச் பிரதேசத்தைக் கசக்கிப்பிழிந்து விட்டோம் என்ற கர்வம் ஒருபுறம் இருப்பினும், கார்காவ் முனையில், மார்ஷல் டிமோஷெங்கோ, மாபெரும் படையுடன், பலத்த எதிர்ப்பையுஞ் சமாளித்துக்கொண்டு முன்னேறியபடி இருப்பது கண்டு ஹிட்லரின் நெஞ்சு துடிக்கிறது. போர் முனையிலுள்ள தளபதிகளோ, ஹிட்லரின் ஏதேச்சாதிகாரத்தைக்கண்டு முணுமுணுக்கிறார்களாம். எனவே ஹிட்லர் போர்முனைக்கு விரைந்தோடியிருக்கிறார். கார்காவில் நடக்கும் கடும்போரில் களத்திலே ஜெர்மன் பிணங்கள் குவிகின்றன. புதிய ஆயுதமொன்றை உபயோகிக்கிறோம்,என்று பெர்லின், பீதிகிளப்பப் பேசுகிறது. டோனெட்ஸ் பகுதியிலே பாய்ந்துவரும் டிமோஷெங்கோவின் படைகளை பயமுறுத்தவே இதுபோல் பெர்லின் செய்தி கிளப்பியிருக்கிறது. மாஸ்கோ வாயிலிலே வந்துநின்று மிரட்டிய போதே கலங்காத ரஷியர், இந்த மிரட்டலுக்கா இப்போது பயப்படப் போகிறார்கள்! ஏராளமான துருப்புகளை அணிவகுத்துக் கொண்டிருக்கின்றது சோவியத் சர்க்கார்! வட ஆப்பிரிக்காவிலே போர் வலுத்துவிட்டது. கார்காவ் முனையிலே கடும்போர் நடக்கிறது சீனாவைச் சிதைத்துவிடுவதென்றுசீறி ஜப்பான் ஆங்கு பெரும்போர்நடத்துகிறது. ஆஸ்திரேலியாவை,ஆசியா கண்டத்திலே புதிய அமைப்பு ஏற்படப்போகிறது, அதிலேசேரப்போகிறாயாஇல்லையா என்றுஜப்பானியப் பிரதமர் டோஜோ கேட்கிறார், மிரட்டுகிறார். இங்ஙனம் போர்பயங்கரமானதாகிக்கொண்டேபோகிறது.உள்நாட்டிலோ, பஞ்சமும் வேலையில்லாக் கொடுமையும், பயமும் பதைப்பும் மிகுந்து வருகிறது. ஹார்கொள்ளைக்காரரின் அட்டூழியங்கள் ஓர் புறம்! வேலை நிறுத்த வேதனை மற்றோர்புறம், விலைவாசி உயர்வு வேறோர் புறமும் வாட்டுகிறது. இந்தியத் தளபதி ஜெனரல் வேவல், பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் இந்தியாவின் பாதுகாப்புக்காக, ஏராளமான தளவாடங்கள் வந்து குவிந்தபடி இருப்பதாகவும், குறிப்பாக, விமான எதிர்ப்பு ஆயுதங்கள் வந்திருப்பதாகவும் கூறியுள்ளார். இது கேட்டு ஆறுதல் மட்டுமல்ல, உற்சாகமும் நம்பிக்கையும் கொள்கிறோம்.

சிங்கப்பூரில் இருந்ததைவிட பலமான பாதுகாப்புகள், இங்கு, கொழும்பிலும், கல்கத்தாவிலும் செய்து வைத்திருப்பதாகக் கூறுகிறார். படைபலமும் ஆயுதபலமும் இருப்பினும், இந்தப் போரிலே மக்களின் மனஅரண் மிகமுக்கியம். இதனைத்தான் சீனாவும், ரஷியாவும் நமக்கு விளக்குகின்றன. போர்முனை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம், உள்நாட்டிலே மக்கள்முனை. இக்கருத்துக் கொண்டே தேசியப் போர்முனை இயக்கத்தை இங்கு துவக்கியுள்ளனர், சென்னை மாகாண கவர்னர் தேசியப் போர்முனை துவக்க விழா வாற்றுகையில், சகல ஜாதி, மத, கட்சியினரும் ஒன்று சேருமின் என்றுகனிவுடன் அழைத்தார். மாகாணத்தின் பல நகர்களில் இவ்விழா நடைபெற்றது. தேசியப் போர்முனை அமைப்பில் அதிகாரிகளாக, பலதோழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மக்களைப் போர்முனை மனப்பான்மை கொண்டோராக்குவர், அதற்கான பிரச்சாரமும் செய்வர். ஆனால், மக்களிடையே ஓரளவு ஆயுதபலமும் இருக்கத்தானே வேண்டும். நேசநாடுகளிடம் நம்பிக்கை இருக்கிறது. ஜப்பானியரிடம் வெறுப்பு இருக்கிறது. இதுபோது மா! அமளி என்றதும் ஆயுதம் எங்கே என்றுதானே எவரும்கேட்பர். இச்சமயத்தில், இராணுவத்தினருக்கு மட்டுமல்ல வேலை! நாட்டு மக்கள் யாவருக்குமேவேலை! அவர்கள், ஓரளவு பயிற்சி பெறவேண்டும். ஓரளவு ஆயுதந்தாங்கும் உரிமைதரப்படவேண்டும். கடலோரப் பிரதேசத்திலே எதிரிகள் எங்காவதோரிடத்தில் காலடிவைத்தால், அவர்களை எதிர்க்கவேண்டுமே! எதைக்கொண்டு எதிர்ப்பது! இதை உத்தேசித்தே பிரிட்டனில், உள்நாட்டுப் பாதுகாப்புப் படைஎன்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். (Home Guard) இதுஇப்போது மிகப்பயன்படுகிறது! விமானத்தின் மூலம் பிரிட்டனில் வந்து குதித்த ஹேர் ஹெஸ் ஒரு (Home Guard) உள்நாட்டுப் படையினரிடந்தானே சிக்கினர்! அது போன்றதோர் அமைப்பு இங்கு வேண்டும்.

போர் மனப்பான்மையை வளர்த்து, எதிரியை எத்தகைய கஷ்டமனுபவித்தேனும் முறியடித்தேதீருவோம் என்ற நெஞ்சுறுதி இருக்க வேண்டுமானால், சாதாரண காலத்திலே மக்கள்இருப்பதற்கும் போர்க்கால மக்களுக்கும், பார்த்ததும் விளங்கிக் கொள்ளக்கூடிய வித்தியாசம் இருக்கவேண்டும். ஒவ்வோர் நகரிலும், நகர மக்களின் எண்ணிக்கைக்குத்தக்கபடி, உள்நாட்டுப் படைகள், தேசியப்போர்முனை அமைப்பாளர்களால், நிறுவப்பட்டு, அந்தப் படைகளுக்கு சிறிது பயிற்சியும், கட்டாரியோ. கத்தியோ, தாங்கும் உரிமையுந்தரப்பட்டு, அவர்கள் உலவிக்கொண்டிருந்தால், உணர்ச்சி எங்ஙனமிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம். போர்முனையிலே இராணுவம் இருக்கிறது எதிரியை முறியடிக்க, நமது நகரிலேயே, உள்நாட்டுப் படை இருக்கிறது, பயம் என்ன இனி! என்று மக்கள் நம்பிக்கையும் தைரியமும்பெறுவர். கூர்க்கா வீரர்களுக்கு இருப்பதுபோன்ற கத்தியோ, கட்டாரியோ, இத்தகைய உள்நாட்டுப் படைக்குத் தரப்படவேண்டும். நாட்டுக்கு ஆபத்துஎன்றதும், "தூக்குவீர் கத்தியை!" என்றதும் நகருக்கு நகர், கிராமத்துக்குக் கிராமம், உடைவாளை உருவிக்கொண்டு உணர்ச்சியோடு கிளம்பும் வீரர்களைப் பெறமுடியும்! சர்க்கார் விரும்பினால், நீதிக்கட்சி இத்தகைய உள்நாட்டுப்படைக்கு, அஞ்சா நெஞ்சர்களாக, ஆயிர மாயிரம் வீரத்திராவிடர்களைத் தரத் தயாராக இருக்கிறது. தோள்வலிவும், மனவலிவும், போர்ப் பரம்பரைக் குணமும், அறப்போருக்காக ஆவியை அர்ப்பணம் செய்யும் ஆற்றலும் கொண்ட வீரவாலிபர்களை, நீதிக்கட்சி, அணிவகுத்து நிறுத்திக் காட்டமுடியும். சர்க்கார் சம்மதித்துப்பார்க்கட்டும்.

**"தூக்குவீர் கத்தியை"** என்று கூறட்டும், பல இலட்சம் கரங்களிலே வாள் விளங்கும், வீரம் ததும்பும், வெற்றிமலரும்! சர்க்கார் இதைக்கவனிப்பார்களா! பிரிட்டனிலே உள்நாட்டுப்படை அமைப்பில் பங்கு கொண்டவரும், ரஷியாவிலே, கொரில்லாப் படைகளை நேரில்கண்டு பல நுட்பங்களைத் தெரிந்துகொண்டு வருமான விட்டிங்டன் என்ற நிபுணர், விரைவில் இந்தியா வரக்கூடுமென்றுரைக்கப் படுகிறது. அந்தச் சமயத்தைப் பயன்படுத்தி, சர்க்கார், இதனைச் செய்ய வேண்டுகிறோம்.

## இஃதன்றோ தோழமை!

பாகிஸ்தானை ஒப்புக்கொள்வதாகப் பாசாங்கு செய்து, லீகினரை மயக்கி, திராவிடரைத் தட்டிவிட்டு, சர்க்காரைத்தழுவலாம் என்று ஆச்சாரியார் மனப்பால் குடிக்கிறார். ஆச்சாரியாரின் சுழல் சுற்றுப்பயணம், கனல் கக்கும் பிரசங்கம். அறிக்கைகள், முதலியன கண்டு, இன்றுவரை, ஜனாப் ஜின்னா மௌனம் சாதிக்கிறார். கக்சார்களின் தலைவர் எழுதிக் கேட்டதற்கும், கடிதத்திலே இதுபற்றி விவாதிக்க இயலாது என்றுரைத்துவிட்டார். ஜனாப் ஜின்னா, ஆச்சாரியாரின் போக்கைக் கண்டு ஆனந்த மடைந்ததாகவோ, பரவசமுற்றதாகவோ, ஒரு குறிப்பும் காட்டிக்கொண்டாரில்லை. பெருங்குணம் படைத்தோரின் இயல்பே அதுதான். தூற்றினால்துடிப்பதில்லை, போற்றினால் பூரிப்பதில்லை! கடமையைச் செய்வர், கலங்கமாட்டார்! கஷ்ட நஷ்ட மேற்பர், கண்பிசைந்து 'கொள்ளார்! ஜனாப் ஜின்னா ஆச்சாரியாரை ஓடோடிவந்து ஆலிங்கனம் செய்துகொண்டு, "ஆச்சாரியாரே! உமது உதவிக்காக எமது வந்தனம்" என்று கூறமாட்டார். அவர்அல்லாபக் ஷல்ல, அற்பசந்தோஷப்படவோ, அலறவோ, ஆனந்தத்தாண்டவமாடவோ, தேவையில்லை. அவர், அரசியல் ஊஞ்சலாடுபவருமல்ல, ஆச்சாரியாரைத் துணைகொள்ள. கவி இக்பாலின் கனவு, இன்று ஜனாப் ஜின்னாவின் திட்டம் பாகிஸ்தான் திட்டமாக வெளிவந்து இருக்கிறது. கவி இக்பாலின் கனவு, காலத்தினால் கலையாத, நவீன நாகரிகத்தினால் போட்டியிட முடியாத, உலக விற்பன்னர்களால் வியக்கப்படும் தாஜ்மஹால், அதிலே உலவிய மன்னர்களின் சரிதை, ஆகியவற்றால் உண்டான உணர்ச்சி! இத்தகைய பாகிஸ்தானுக்கு ஓர் பார்ப்பனரின் ஆதரவுகிடைத்தாலென்ன, கிடைக்காமற் போனாலென்ன! அதிலும் இன்று ஆதரவு காட்டும் ஆச்சாரியார், நேற்றுவரை ஜனாப் ஜின்னாவைத் தூற்றியவர், நாளை மீண்டும் தூற்ற ஆரம்பித்தால் நாம் ஆச்சாரியப் படமாட்டோம். எனவேதான் ஜனாப் ஜின்னா இதுவரை, மௌனமாகவே இருக்கிறார்.

திராவிடரும் இஸ்லாமியரும் தோழர்கள், கூட்டுப் படை அமைத்துப், போர்நடத்தி வெற்றிக்கொடியை நாட்ட வேண்டியவர்கள். இந்தத் தோழமையை, முஸ்லீம் லீக்கினால் நிறுவப்பட்ட தேசப் பாதுகாப்புச் சபையின் அங்கத்தினரும், பிரபல தலைவருமான ஜனாப் கலிகுஸ்மான், அண்மையில் கள்ளிக்கோட்டையில் பேசுகையில் அழகுறக் கூறினார்.

**"தென்னாட்டு ஆட்சி திராவிடரிடமே இருத்தல் வேண்டும். திராவிடர்களுக்குத் திராவிடஸ்தானம் தேவை. அவர்கள் இனி ஆரிய ஆட்சியிலே இருக்கச் சம்மதிக்க மாட்டார்கள்"** என்று அன்பர் கலிக்குஸ்மான் கனிவுடன் கூறினார். தமக்குச் சாதகமான, **பாகிஸ்தான்** ஆச்சாரியாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது என்பதற்காக அவர் தென்னாட்டு அடிப்படைப் பிரச்னையாகிய, திராவிடநாட்டுப் பிரச்னையை மறந்தாரில்லை. அதை மறந்து பேசும் ஆச்சாரியாருக்குச் சரியான சவுக்கடி தருவதுபோல், ஜனாப் கலிக்குஸ்மான், பேசியுள்ளார். இஃதன்றோ தோழமை!

ஆனால் ஆச்சாரியார், இதனை உணருவாரா! நமக்குச் சந்தேகமே. நல்ல மாட்டுக்குத்தான் ஓர் அடி! நல்ல மனிதருக்கு ஓர் சொல்! ஆச்சாரியார், லீகரும் திராவிடரும் சேர்ந்து 'அடிமேல் அடி தருவதுபோல், செய்த பிரச்சாரத்துக்குப்பிறகு, மூன்றாண்டுகளுக்குப் பிறகு, பாகிஸ்தானை மட்டும் ஒப்புக்கொண்டிருக்கிறார். இனி திராவிடநாட்டுப் பிரிவினைப் பிரச்சினையையும் ஒப்புக்கொள்ளச் சிலகாலம் பிடிக்கும். நமது கட்டுப்பாடானபிரச்சாரமே அந்த நிலைமையை உண்டாக்கும். திராவிடத் தோழர்களே! எங்கே உங்கள் சங்கநாதம்!

## மணி மறைந்தார்.

தோழர் நாகைமணி இறந்துவிட்டார்! "மிகவும் இளைத்துப்போனார், என்றபோதிலும், குணமடைந்து வருகிறார்," என்று சென்றவாரம் தெரிவித்தனர். 29—5—42, சென்னையிலிருந்து, நமது சிந்தையைக் கலங்கவைக்கும் தந்திவந்தது, நமது தோழர் இறந்தார் என்று. தோழர் மணிசின்னாட்கள் நோய்வாயுற்றிருந்தார், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்தார். எவ்வளவோ முயன்றாலும், அவரது மறைவைத்தடுக்க முடியவில்லை.

தோழர் மணியின் கட்சித்தொண்டுகளைக் கண்டோ கேட்டோ இராத தமிழர் யார்! அந்தச்சிவந்த மேனியன், சிரித்தமுகத்துடன் உபசாரமொழி பேசி உற்சாக மூட்டக்கேட்காத தமிழர் காது எது! தமிழரின் எதிரிகள் விரண்டோடும்படி, தூக்கித்தூரத்திய அந்தக்கைகள், தமிழர் தலைவருடன் தமிழகத்திலே நடமாடிய அந்தக்கால்கள், தமிழருக்காக உழைத்து உழைத்து உருமாறிய அந்த உடலம், இன்று, மண்ணில்சேர்ந்து விட்டது. அவரது உணர்ச்சியும், அந்த உணர்ச்சியை எதிர்ப்போரைக்கண்டதும் அவரடையும் உக்கிரமும், தமிழரில் யார் முன்னேற்ற மடைந்தாலும், கண்டு பூரிக்கும் இயல்பும், நாமறிவோம், அறிந்ததாலேயே இன்று, கசங்கியகண்களுடன், கைநடுக்குற, நெஞ்சுபதைக்க நிலைதடுமாறி, இந்தச் சோகச்செய்தியை எழுதுகிறோம். பெரியாரின் சுற்றுப்பிரயாணங்களிலே பலமுறை அவர் கலந்துக்கொண்டு, பலமாநாடு, பொதுக்கூட்டங்களில் பங்குகொண்டு தமிழரின்மணியாகத்திகழ்ந்தார். அத்தகைய மணியை இழந்தோம், என்செய்வோம். தமிழரின் வீரத்துக்கும், வாலிப உணர்ச்சிக்கும், இலாபநோக்கமற்ற கட்சிப்பற்றுக்கும், நடமாடும் உதாரணமாக இருந்த நமது நண்பரை இழந்தோமே, நாம், உய்யும்வகை குறைந்தோமே, என்றெண்ணிக்கலங்குகிறோம். அவருடைய உடலம் சுடலை செல்லுகிறது. தோழர்களிடை உரசி, எதிரிகள்மீது மோதி, தமிழரின் இயல்பை எடுத்துரைத்த உடலம் சுடலைசெல்லுகிறது! தமிழரின் அன்பும், மரியாதையும், அவருக்குப் பரிசாகத்தந்தது இயக்கம். பதவியல்ல, பணமல்ல, பட்டுப்பணியல்ல! அவருடைய வியர்வையும், இரத்தமும் கட்சிக்கு அவ்ரளித்தார், இன்று அவரது சவத்தைத் தமிழர் தமது கண்ணீரால் கழுவுகின்றனர். மலர்முகம் படைத்த மணியே நீயோ மறைந்தாய், எம்மைப்பிரிந்தாய்;! மணி மறையினும் மணியின் புகழ் ஒளி தமிழகத்திலே நின்றுலவி, நமக்கு வழிகாட்டுமாக. அவரது குடும்பம் நெஞ்சங்குமுறிநிற்கும், நாம் என்ன கூறுவோம் அவர்களை ஆற்ற, தேற்ற அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களின் துக்கத்தைத் தமிழகம் பங்கு கொள்கிறது. இறந்தது அவர்களின் மணியல்ல, தமிழரின் மணி! எங்ஙனம் தாங்குவோம் துக்கத்தை! என் செய்வோம்!

"வேல்விழியால் எந்தன்
விலாப்புறத்தைக் கொத்தாதே!"

அரச குமாரிக்குத் தமிழ்கற்றுக் கொடுக்கவந்த
கவி கூறுகிறான் இதுபோல்!
அவள் என்ன சொன்னாள்? காதல் ஈடேறிற்றா?

பாரதிதாசன் இயற்றிய
— புரட்சிக்கவி —

0—2—6 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்று, தெரிந்து கொள்க! தேன்மொழி! முக்கனிச்சாறு! முத்துக்கள்!
சொற்ப பிரதிகளே உள்ளன.

திராவிடநாட்டு நிலையம் காஞ்சிபுரம்.

சுழல் விளக்கு (5-ம் பக்கத் தொடர்ச்சி)

ராட்டங்களைப்போல் வெறும்தடியடியுடனும் சிறைவாசத்துடனும் இந்தக் கிளர்ச்சி நின்றுவிடாது. வெளியில் வரும் ஒவ்வொரு காங்கரசுக்காரனும் அந்த கணத்தில் சுடப்படலாம்...போர்முனை செல்லும் வீரரைப்போல மனைவி மக்களிடம் கடைசி முறையாக விடைபெற்றுக் கொண்டு புறப்படும் நிலைமை ஏற்படலாம்." இவ்வாறு கூறுகிறது பாரததேவி.

"பொம்மெனப் பணைத்து விம்மிப் போர்மதன் மயங்கி வீழும் கொம்மைசேர் முலையினளை கூறுவோம் ஒன்று கேண்மோ—தர்ப்பை தாங்கும் வீரர்கள் குண்டுக்கு மார்கொடுத்து போர்க்களம் புகுந்த சேதி இதுவரை நாம் கேட்டிலோம். தடியடிக்கும், "ஏ"கிளாஸ் வசதிகளுடன் சுகபோக சிறைவாசத்துக்கும் ஈடு கொடுக்க முடியாத காங்கரசாரா துப்பாக்கிப் பிரயோகத்தை எதிர்த்து நிற்கப்போகிறார்கள்? எதையேனும் சொன்னால் பொருந்தச்சொல்ல வேண்டாமா? முடியாத காரியத்தைப் பற்றி மிகைபடக்கூறுவதால் மக்கள் எள்ளிநகை யாடுவார்களேயன்றி வேறுபயன் எற்படப்போவதில்லை. "பாரததேவி"யின் கூற்றுக்கும் இதேகதிதான் நேரிடப்போகிறது. காந்தியாரையும் காங்கரசையும் பிரிட்டிஷ் சர்க்கார் "நிறுத்து அளவிட்டு" வைத்திருக்கிறார்கள். இந்தச் சலசலப்புக்கா அவர்கள் அஞ்சப் போகிறார்கள்! இனி "மிரட்டல்" முயற்சி எதுவும் பயன்தரப் போவதில்லை. காந்தியாரும் காங்கரசும் வீண் "ஜம்பத்தை"க்கட்டி வைத்துவிட்டு மற்றக் கட்சிகளுடன் நேரிய முறையில் சமர்ச ஏற்பாடு செய்து கொண்டால்தான் நன்மை விளையும்.

## எதிரொலி

"என்னைச்சிலர் "கலகக்காரன்" என்கிறார்கள். பிறருடையசுதந்திரத்தை எவன்பறிக்கவிரும்புகிறானோ அவன் தான் கலகக்காரன், ஒரு பெரிய கூட்டத்துக்கே பலாத்காரமாக—சுதந்தர உரிமை அளிக்க விரும்பாதவர்கள் பெரும் கலகக்காரர்கள்."

—சி. இராசகோபாலாச்சாரி.

ரொம்ப நியாயம். தென்னாட்டின் பெரிய சமூகமான ஒரு கூட்டத்தைக் கடவுள், மதம், புராணம், வகுப்புக்களின் பெயரால் ஆடுமாடுகளாக அடக்கி வைத்து, சுதந்தர உரிமை அளிக்காமலிருப்பவர்களை "கலகக்காரர்கள்" என்று சொன்னால் மட்டும் போதுமா? ஆதிக்க வெறியர், சுயநலக்காரர், சோம்பேறிகள் முடிச்சுமாறிகள், கொள்ளைக்காரர் என்பன பொருந்தாவோ?

ಃ ಃ ಃ ಃ

"நமக்குப் பொதுவான விரோதியை நாம்எதிர்க்க வேண்டுமானால் நமது சொந்த அரசாங்கமின்றி நாம் எதிர்க்க முடியாது"

—சி. இராசகோபாலாச்சாரி.

திராவிடநாடு திராவிடருக்காக வேண்டுமென்றும் திராவிட ஆட்சி வேண்டுமென்று கேட்பதும் 'பொது எதிரி'யைப் பொசுக்கிப் பெருவாழ்வு வாழத்தான்!

ಃ ಃ ಃ ಃ

"நான்கூறும் உபமானங்களையும், சிறுகதைகளையும் பற்றி ஜாக்கிரதையாக இருக்கும்படி ஒரு புதுத் தினுசான கிளர்ச்சிசெய்யப்படுகிறது"

—சி. இராசகோபாலாச்சாரி.

காலமெல்லாம் உமது சூழ்ச்சி நிறைந்த சிறுகதைகளையும் உபயோகமற்ற உபநிடத உபதேசங்களையும், உபமானங்களையும் கேட்டுக்கேட்டு, நம்பி நம்பி நலிந்துபோன சோணகிரிகளும் அப்பாவிகளுமே இப்பொழுது அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது வியப்புக்குரியது!

ಃ ಃ ಃ ಃ

"எனதுவேலை யெல்லாம் வடநாட்டில் தானிருக்கிறது, வடநாட்டைத் திருப்தி செய்வதுதான் எனது வேலை"

—சி. இராசகோபாலாச்சாரி.

"இந்தி"யைத் தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக வைத்ததற்கும், எதிர்த்தவர்களைச் சிறைக்கனுப்பி, எடுத்ததைக்கொண்டு அடிப்பதாகச் எகத்தாளம் பேசிக் கொடுங்கோலாட்சி புரிந்ததற்கும் காரணத்தைச் சொல்லிவிட்டார்! வடநாட்டைத் திருப்தி செய்வதுதான் அவரது வேலை. அதற்காக அவர் எதையும் செய்யத் துணிவாரல்லவா?

### "ஜப்பானியர் இஸ்லாத்தின் எதிரிகள்"

எல்லைப்புற முஸ்லீம் லீக் காரிய தரிசி விடுத்துள்ள அறிக்கையில், ஜப்பானியர் இஸ்லாத்தின் விரோதிகள் என்றும், அவர்களை எதிர்ப்பது முஸ்லீம் உலகின் கடமை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

லண்டனில் லெனின். (12ம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனிலே, லெனின் அன்றோர் நாள் வாழ்ந்த விடுதியைக் கண்டுபிடித்து, இங்கு லெனின் இன்ன ஆண்டிலிருந்து இன்ன ஆண்டுவரை வாழ்ந்தார்,என்று பிரிட்டிஷ் சர்க்கார், பளிங்குப்பலகை அமைத்தனர்! லண்டனிலே லெனின்! தோழர்களே, யானை வரும் பின்னே, மணியோசைவரும் முன்னே, என்பது பழமொழி! அழகான மொழியுங்கூட! இத்தகைய மாறுதல்கள் மலரப்போகும் நாட்களில், மாநிதிமட்டும் போதாது! சீமான்களின் சீற்றத்தைக் கண்டு பயந்த காலமும் பட்டுப்போய் பன்னெடுங் காலமாகிவிட்டது! கண்மூடிமக்கள், கனல்கக்கும் மக்களாக மாறிடுவர்! இந்தச் சமயத்தில், தமிழரின் தளபதிகளாகி, உங்கள் தனத்தைத்தமிழர் மறுமலர்ச்சிக்குதவி, உங்கள் பலத்தைத் தமிழர் ஆட்சிஎழ நடத்தப்படும் அறப்போருக்கு அளித்து, அழியாப்புகழ் பெறுக என்று அவர்களை நான் அன்புடன் அழைக்கிறேன், "அண்ணாதுரை, சீமான்களைக் குறைகூறி மாநாட்டிலே பேசினான், அவனைக் கட்சியிலிருந்து நீக்கும்படிகூறப்போகிறேன்" என்று கழுக்குன்றமாநாட்டுக்கு, காரணத்தோடு கூடிய கனிவுடன் வந்திருந்த சீமானொருவர், சீறினாராம்! அதுபோல், சீமான்களே, நான் விடும் அழைப்புக்கண்டு என்னையும் நீக்கிவிடவேண்டும்என்று கூறுவீரோ, ஏதோ நானறியேன். ஒன்று அறிவேன். நான். இத்தகையவர்கள் நீக்கப்படக்கூடும், ஆனால்அவர்கள் விதைத்து வைத்துள்ள நினைப்புகளை நீக்கமுடியாது! அந்த நினைப்புகள், நெடுமரமென நிற்கும் ஆரியத்தை முறித்துச் சாய்க்கத்தான் போகின்றன!அந்த நேரத்திலே சீமான்களே, அதன் அடியிலேநிற்காதீர், ஆபத்து, என்றுநான், அன்புகாரணமாக, எச்சரிக்கிறேன். கேட்பதும் கேட்காததும் அவர்கள் இஷ்டம்! அதைச் சொல்வதிலே எனக்கென்ன கஷ்டம்!

## வார்தார்விலே,

பண்டிதஜவஹர். ஆச்சாரியாரைஎதிர்த்து ஒழிக்கக் காந்தியாரைத் தூண்ட, காந்தியார், "ஆச்சாரியாரை அடக்க. மக்களின் கவனத்தை வேறுவழியிலே திருப்புகிறேன். புதிய இயக்கமொன்று துவக்குகிறேன் பொறு!" என்று கூறி, சமாதானப் படுத்துகிறார் என்று அரசியல் வட்டாரத்திலே. பேசிக்கொள்ளப் படுகிறது. ஆச்சாரியார்கதி யாதாகுமோ தெரியவில்லை!

நுமஸ்தாவின் பெண்தான்! (8ம் பக்கத் தொடர்ச்சி)

து? என் ஏவலாளியாயிற்று! இந்த நேரத்தில் என் அழகில் சொக்கி மிராசுதாரர் கிடக்கவும், மிராசுதாரருக்குக் கிடைத்தவள் நமக்குக் கிடைக்கவில்லையே என்று வேறுபல குட்டிக் குபேரர்கள் ஏங்கவும், ஆறு ஆண்டுகள் வாழ்ந்தேன். அமிர்த சாகரத்தில் ஆறு ஆண்டு மூழ்கிக் கிடந்தேன். மிராசுதாரர், எனக்கு அலாவுதீனின் தீபமானர். சோதிமயமான் வாழ்வு வாழ்ந்தேன். ஊரார், அதாவது நான் முன்பு வசித்துக் கொண்டிருந்த உலகில், யார் என்னபேசிக்கொண்டார்களோ தெரியாது. அதனைக் கவனிக்க எனக்கு நேரமில்லை. விதவிதமாகச் சிங்காரித்துக் கொள்ளவும், வகை வகையான களியாட்டாங்களில் ஈடுபடவும். பல பல பக்தர்களுக்குத் "தரிசனம்" தரவும், பலபேர்தவமிருந்தும் வரம்பெறுது திகைக்கக் கண்டு நகைக்கவும், நேரம் இருந்ததேதவிர, அந்தப்பழையஉலகைப் பற்றி எண்ண நேரமேது! என் உல்லாச வாழ்வுஉச்சநிலையில் இருக்கையில் ஓர் நாள், இந்தச் சமயத்தில் சோமு என்னைக் கண்டால் என்ன எண்ணுவான்? என்று ஒரு புதுமையான எண்ணம் தோன்றிற்று. அந்த எண்ணம் வளரவும் தொடங்கிற்று. சில நாட்கள் சென்றன. சோமு என்னைக் காணும் சம்பவம் நிகழ்ந்தது! (தொடரும்)

## சீன முஸ்லீம் பிரமுகர் ஜின்னாவைப் பாராட்டுகிறார்.

சீனாவிலிருந்து இந்தியா வந்துள்ள அல்லாமா மௌலானா உதுமான் ஊ. இந்தியாவிலே முஸ்லீம்கள். ஜனாப் ஜின்னாவின் தலைமையில் கட்டுப்பாடாக இருப்பதைப் பாராட்டி, லீக் தலைவரைப் போற்றினர். அல்லாமா ஊ. நிஜாம் மன்னரைப் பேட்டி கண்டு பேசினர். விரைவில் ஜனாப் ஜின்னாவைப் பேட்டி காண்பார்.

## தேசீயப் போர்முனை.

காஞ்சீபுரத்தில். கடந்த ஞாயிற்றுக்கிழமை, தேசீயப் போர் முனை துவக்கவிழா சில்லா கலெக்டர், திவான் பகதூர் விஸ்வநாத ராவ் தலைமையில், தாலூக்கா ஆபீசில் நடைபெற்றது. தோழர்கள் சின்னய்யா, அநந்தாச்சாரியார், பரவஸ்த்து இராசகோபாலாச்சாரியார், C. N. அண்ணாதுரை, ஆகியோர், மேற்படி விழாவின் நோக்கத்தை விளக்கிப் பேசினர்.

## "கம்பன்—ஆரியதாசன்!"

### பெரியார் பேருரை

குடந்தை. சுயமரியாதைச் சமதர்மச்சங்க எட்டாவதாண்டு விழா மே 24ந் தேதி திருச்சி தோழர் T. P. வேதாசலம் தலைமையில் நடைபெற்றது. பெரியார் பேருரை நிகழ்த்தினர். சங்க ஆண்டு அறிக்கையைத் தோழர் K. கணபதி படித்தார் தமிழ்வேள் ராவ்சாகிப் T V உமாமகேசுவரம் பிள்ளையின் படத்தை, தோழர் ராவ்சாகிப் குமாரசாமிப் பிள்ளை திறந்து வைத்தார் ஜனாப் மகமத் இப்ராகீம், "இஸ்லாமும் சுயமரியாதை இயக்கமும்" எனும்பொருள் பற்றிப் பேசினர். மாதர் முன்னேற்றம். என்பது பற்றி சென்னை லேடி விலிங்டன் கல்லூரி ஆசிரியைகள் தோழியர் கிருஷ்ணவேணி அம்மாள், பத்மாவதி அம்மையார் ஆகியோர் பேசினர்.

"வக்கீலின் மனைவி" என்ற சமுதாய சீர் திருத்த நாடகத்தைக் கழகத்தினர் நடித்தனர்.

பெரியார் பேசுகையில். ஆரிய உயர்வுக்கும் திராவிடரின் தாழ்வுக்கும், கம்பனே காரணம். தமிழராட்சியின் முதல் வேலை, கம்பனின் இராமாயணத்தைத் தீயிலிடுவதாகும் என்று ஆவேசத்துடன் பேசினர். ஆரியத்தால் தமிழர் அழிந்ததுபற்றி விளக்கினர். ரஷிய நாட்டு சோவியத் முறைபற்றி விளக்கமுரைத்தார்.

தோழர் S. R. சாமி வந்தனங்கூற ஆண்டுவிழா இனிது முடிந்தது.

## திருப்போரூர் கோயிலில் களவு.

திருப்போரூர் முருகர்கோயிலில், 650ரூபாய்மதிப் புள்ள நகை சென்றவாரம் களவாடப்பட்டுப் போயிற்று.

## ஆற்காடு முஸ்லீம் லீக் ஆண்டுவிழா

31—5—42 ஞாயிற்றுக்கிழமை. ஆற்காடு முஸ்லீம் லீக் ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் C. N. அண்ணாதுரை, T. P. S. பொன்னப்பன் ஆகியோர். மேற்படி ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றுவர்.

## A. R P.

பம்பாயில் 11500 A. R. P. வார்டன்கள் இருக்கின்றனர். 111, சைகில் மெசன்சர்கள் உள்ளனர்.

ரோமாபுரி ராணிகள் (10ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு அவனைக்கெடுத்தது. அவன், கோல்கிடைத்தது. மக்களை அடக்கியாளவே என்று கருதினன், கொடுமைபுரிந்தான். நீரோ நாசமானதற்குக் காரணம், நீரோவுக்கு எதிரிடையாகப் புரட்சிப்பொறிகள்கிளம்பியதற்குக் காரணம், கொடுங்கோலாட்சி என்பதையும் மறந்து நீரோவின் நோயை கால்பா, தனக்கும் வருவித்துக்கொண்டான். நோய்கொண்ட நீரோவின் நிலைமை கால்பாவுக்கும் வந்தது.

"நீரோ கொடியோன்! அவனாட்சியைத் தொலைமின்" என்று கால்பா முழக்கஞ்செய்தே மக்களைப் படைதிரட்டினன் முன்னம். கால்பா, கொடுமை புரியத்தொடங்கியதும், "கால்பா ஒழிக" என்றகூச்சல், ரோம்ராச்யத்தில் சுலபத்தில் பரவிவிட்டது. நீரோவைக்கவிழ்க்க கால்பா கிளம்பினன், அதுபோலவே கால்பாவைக்கவிழ்க்க, ஆத்தோ கிளம்பினன். அவனுடைய படைகளுக்கு ஆதரவு பெருகிற்று. மக்கள், கால்பாவைத் தொலைத்துவிடத் தீர்மானித்தனர். மக்களின் ஆதரவை இழந்து, உள்நாட்டிலே எதிர்ப்பைப் பெற்றுவிட்டதால், கால்பாவுக்கு அவனுடைய படைகளிலேயே ஆதரவு புகைந்துவிட்டது. படைவீரரில் சிலர், கால்பாவைக் குத்திக்கொன்றுவிட்டனர். குன்றின் உச்சியில் ஏறிநின்று, கீழேஇருக்கும் பொருள்களை ஆணவத்தோடு பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, காலிடறிக்கீழே உருண்டவன்போல், அரசபீடத்திலமர்ந்து, ஆணவத்தைத் தோழனாகவும், மமதையை மந்திரியாகவும் கொண்டதால், கால்பா, தலைமீதிருந்த முடியை இழந்ததோடு, தலையையே இழந்தான்.

லெபிடா வைப்பெற்ற பிறகு, வேறோர் மாதரின் நேசத்தையும் வேண்டேன் என்று வெறுத்தொதுக்கிய மன உறுதியும் நற்குணமும், கால்பா, மன்னனானதும் அவனை விட்டகன்றது. லெபிடாவும் இறந்துவிட்டாள். எனவே கால்பா, மமதையுடன் நேசங்கொண்டான், மண்டலத்தை இழந்தான், உயிரையும் இழந்தான்.

லெபிடா வுடன் இன்புற்றிருந்த நாட்களிலே, வெறும் படைத்தலைவனாகமட்டும் இருந்தகாலத்திலே, கால்பாமீது கணைகளைத்தொடுத்த காரிகையர் பலர்; கலங்கவில்லை கால்பா! அக்ரிப்பானாவின் அஸ்திரங்கூட, கூர்மழுங்கிக் கீழே வீழ்ந்ததேயன்றி, கால்பாவின் மனதைத்துளைக்க முடியவில்லை. அத்தகைய கால்பா அதிகாரமெனும் அஸ்திரத்தால் தாக்கப்பட்டு, அழிந்தான். தனது கணவனின் அன்பைவிட, ரோம் சாம்ராச்யத்திலே மட்டுமல்ல, உலகிலேயே வே[illegible] உயர்ந்த பொருள் இருக்கமுடியாது என்று[illegible] வாழ்ந்துவந்த லெபிடா, தனது கணவனின் [illegible] நினைப்பும்கெட்டு, அவனுடைய உயிரைச் சுட்டு[illegible] [illegible] எதிர்ப்புத் தோன்றியதைக் [illegible] லெ[illegible] அதற்கு முன்பே இறந்துவிட்டாள்.

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

வீ. எஸ்.

மாவீரனின் மனைவி!

மரக்கட்டையாற் செய்த பொம்மை அ[illegible].

சிங்காதனமேறிட உரிமை கொண்டவள்.

உரிமை இருக்கிறது, பயன் என்ன? அனுபவிக்கத் தெரியாத அசடு.

மாதவம் புரிவோரையும் மயக்கிடும் மனோஹரமான மலர்ச்சோலைகள் அவள் அரண்மனையை அடுத்துள்ளன!

உண்மை! அங்கு, மயிலும் குயிலும் நடமாடுகிறது. வண்டு, மலரைத்தழுவி மதுஉண்டு பாடுகிறது. அவள் உலவினதில்லை அங்கே.

தங்கக்குவியல், தகதகவென ஜொலிக்கிறது அரண்மனை பொக்கிஷத்திலே!

உண்மைதான்! ஆனால் அவள் அதனைத் தாண்டி நடக்கிறாளே யொழிய, தொட்டும் பார்க்கவில்லை.

சிங்காரச் சிற்றாறு சிந்துபாடுகிறது.

ஆமாம்! அவள் செவிக்கு அது விருந்தாவதில்லை அவள் ஓர் குருடி! கண் இருந்து பயனென்ன, கருத்தற்றவள். காவலனின் கட்டழகியானாள், காரியத்திலே பூஜ்யமாக இருக்கிறாள். சுந்தரமான உருவம் பெற்றிருக்கிறாள், சத்தற்றவளாகவே வாழுகிறாள். அவளுக்குக் கிடைத்துள்ள இடமும் நிலையும் வேறுயாருக்குக் கிடைத்தாலும், இப்படியா, இருப்பாள்? ரோம் நாடு கிடுகிடுவென ஆடாதா! அதிகாரத்தால் அபிஷேகிக்கப்பட்டு, அரசர்களால் பூசிக்கப்பட்டு, மந்திரிகள் சாமரம்வீச, மாவீரர்கள் கட்டியங்கூற, சீமான்கள் சிந்துபாட, சீமாட்டிகள்நாட்டியமாட, பவனிவருவாள்! ரோம்நாட்டு ரமணியாக வாழ வழி இருக்கிறது, வகைதெரியாது கிடக்கிறாள் இந்த வனிதை. மாவீரனின் மனைவியாகி என்ன சுகம் கண்டாள். இதற்கு முன்பு, ரோம்நாட்டு ராணிகளாக இருந்தவர்கள் கண்ட ரசத்திலே, ஆயிரத்திலோர்பாகம் இவள் கண்டதுண்டா? தன்னிடம் மலரும் மலர் தனக்குப்பயன் படாத செடி கொடிபோல் இவளுக்குக் கிடைக்கும் அதிகாரமும் அந்தஸ்தும் இவளுக்குப் பயன்படுவதில்லை. லேபிடா ராணி என்று இருக்கிறாளேயொழிய, அனுபவித்ததென்ன!

ரோம் நாட்டு ரசவல்லிகள் இங்ஙனம் பேசிக்கொண்டனர், லேபிடாவைப்பற்றி. லேபிடா, லலிதமானவள், ஆனால் போகத்தில் அவள் லயிக்கவில்லை. சேற்றிலோர் செந்தாமரைபோல், காமக் கூத்தர்கள் வாழ்ந்த நாட்டிலே, லேபிடா இருந்தாள். அதிகாரத்தால் அவள் ஆணவங்கொண்டாளில்லை. அந்தஸ்து அவளுக்கு அகந்தையைத் தரவில்லை. அரசி என்ற நிலை அவளுக்கு அற்ப புத்தியையோ, பேராசையையோ தரவில்லை. தாமரை இலையில் தண்ணீர் பட்டும் படாததுபோல் இருக்குமாம். லேபிடாவும் அங்ஙனமே வாழ்ந்து வந்தாள். கோலாகலமாக, லீலாவிநோதமாக வாழ்ந்து வந்த ராணிகள் மிகுந்த ரோம் சாம்ராச்யத்தில், லேபிடாபோல் நற்குணத்தையே அணி[illegible]ம், அடக்கத்தையே அழகாகவும், கணவனிடம் [illegible]ட அன்பையே பரிமளமாகவுங் கொண்டு வீண் [illegible]ரத்தில் விருப்பமின்றி, அதிகாரத்துக்காகச் [illegible]யும், அகந்தையின்றி, வாழ்ந்து வந்தாள். இது [illegible]ந்தக்கதே. ஆடம்பரக் காரிகளும், ஆ[illegible]கரை அடிமை கொண்டவர்களும், முடிமன்னரைப் பெற மோகனாஸ்திரம் எவியவரும், தர்பாரில் இடம் பெற தூதுவிட்ட தளுக்குக் காரிகளும், உடலை அடகு வைத்து ஊராளும் உரிமையை உறிஞ்சியவர்களும், கொண்டவனுக்கு விஷமிட்டு, கோல் கொண்டவர்களும், அதிகார வெறியால் ஆபாச ஆட்டமாடியவர்களும், நிறைந்த காமவேள் நடனசாலையில், அடக்கமும் அன்பும், பெருந்தன்மையும் பெண்மையும் பொலிவுற ஒரு லேபிடா தோன்றியது மகிழ்ச்சி தருவது மட்டுமல்ல, ஆச்சரிய சம்பவமுங்கூட! கண்ணால் அழைத்தால் வராதவரைக் கைபிடித்திழுக்கும் அளவு காமவெறிகொண்டு வாழ்ந்த மெசாலினா, சுந்தரபுருடர்கள் இருக்கும் வரை சுகானுபவத்தைத் தேடுவதைத் தவிர சுந்தராங்கிகளுக்கு வேறு இலட்சியம் ஏது என்று கருதிய ஜூலியா, அதிகாரத்துக்காக எவனையும் பஞ்சணைக்கிழுக்கும் பாதகத்தைப் பக்குவமாகச் செய்த அக்ரிப்பானா, முதலியோர் உதித்த ரோம்நகரில் கணவன் மன்னனானதும், கறைகொண்ட நெஞ்சுடன், அவனைச் சிறைகொண்டு, அதிகாரம் செலுத்தும் சதி எண்ணம் கொள்ளாமல், வாழ்ந்துவந்தவள் **லேபிடா** இத்தன்கைய இயல்புள்ள இன்னிசையை, **கால்பா** படைத்தலைவனாக இருந்தபோதும், ரோம் நாட்டு அதிபனானபோதும், உள்ளன்போடு நேசித்து அவளுக்குத் துரோகம் செய்ய மறுத்து, காமச்சேற்றில் புரளாது இருந்தான். லேபிடாவின் அடக்கமும், அவளது கணவன் **கால்பா**வின் கட்டுக்கடங்கிய கருத்தும் ரோம் நாட்டு உல்லாச உலகில், ஆச்சரியத்தைக் கிளப்பி விட்டது. இவர்கள் அபூர்வமான பிறவிகள், அனுபவிக்கத் தெரியாதவர்கள், என்று ரோம் ராச்ய உல்லாசர்கள் எண்ணிப் பரிதாபப் பட்டனர்.

**கால்பா**, லேபிடாவைக் கலியாணம் செய்து கொண்டதுமுதல், அவள் கல்லறைபுகும் வரையில் அவளன்றி வேறோர் களிப்புக்கருவியைக் கண்டதில்லை, கொண்டதில்லை. அவள் இறந்த பிறகும், அவளை எண்ணி ஏங்கினான். பிறரின் பிடியிடை, அன்னநடை, கிளிமொழி, பொன்மேனி, கார்நிறக்கூந்தல், கச்சடங்காததனம், கண்களின் கனிவு, இதழின் துடிப்பு, கன்னங்களின் பளபளப்பு, கட்டமைந்த உடலின் கவர்ச்சி, தூது, துதி, எதையும் பொருட்படுத்தவில்லை. லேபிடா இறந்தாள், என் மனைவாழ்வும் இறந்தது என்று தீர்மானித்துவிட்டான். ரோம் ராச்யம், இதுபோன்ற சம்பவத்தை அடிக்கடிக்காண்பதில்லை. மனைவி, காதலி, காமவல்லி, கள்ளக்கன்னிகை, திடீர்த்தையல், என்று விதவிதமான வனிதையருடன் ஆடிடும் அரசர்களைக் கண்டிருக்கிறதே யொழிய இத்தகைய, காதல்வாழ்க்கையை நடத்திய காவலனைக் கண்டதில்லை.

**கால்பா**, படைத்தலைவனாக இருந்து, ஸ்பெயின் நாட்டில் வசித்துவந்தபோதுதான், ரோமில், "நீரோ", கொடுங்கோலாட்சி புரிந்து, கோணற்கூத்தாடிக்கொண்டிருந்தான்.

**கால்பா**, புரட்சிக்கொடியைத் தூக்கினான், நீரோ நெஞ்சிலே கட்டாரி நுழைந்தது, சவக்குழியில் அவன் பிணம் புகுந்தது.

**கால்பா**, ரோம்மன்னனானான். தனது நற்குணத்தாலும், நற்செய்கைகளாலும், மக்களின் மனதை முதலில் மகிழ்வித்தான். ஆனால் அதிகார போதை

(9ம் பக்கம் பார்க்க)